வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண்.2513/சி2/2019 நாள். .04.2019

| | |
|---|---|
| பொருள் – | குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் – 2019–2020 ஆம் கல்வியாண்டில் அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழுந்தைகளுக்கு குறைந்தபட்சம் 25 % இட ஒதுக்கீடு வழங்குதல் –100% இலக்கினை எய்திட 22.04.2019 முதல் 18.05.2019 வரை பள்ளிகளில் இணைய வழியாக விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்திட தக்க ஏற்பாடுகள் தயார்நிலையில் வைக்க பள்ளிகளுக்கு அறிவுரை வழங்குதல் – சார்பாக. |
| பார்வை – | 1.குழந்தைகளுக்கு இலவச மற்று கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011.<br>2.அரசாணை(நிலை) எண்.60, பள்ளிக்கல்வித்(எக்ஸ்2)துறை, நாள்.01.04.2013.<br>3. அரசாணை(நிலை) எண்.59, பள்ளிக்கல்வித்(பொநூ2)துறை, நாள்.12.05.2014.<br>4. அரசாணை(நிலை) எண்.66, பள்ளிக்கல்வித்(பொநூ2)துறை, நாள்.07.04.2017.<br>5.குழுந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.843/இ1/2019 நாள்.27.03.2019 |

---

பார்வையில் 5ல் காண் இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு பார்வையில் கண்ட அரசாணைகளின்படி 2019–2020 ஆம் கல்வியாண்டில் RTE சட்டப்பிரிவு 12(1)(சி)இன் கீழ் 25 % இடஒதுக்கீட்டின்படி சேர்க்கை நடைபெற உள்ள நிலையில் பெற்றோர்கள் 22.04.2019 முதல் 18.05.2019 வரை http://rte.tnschools.gov.in/tamil-nadu என்ற இணைய வழியாக விண்ணப்பிக்கலாம், மேலும் அனைத்து சிறுபாண்மையற்ற தனியார் சுயநிதி(மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள்) பள்ளிகளுக்கு அருகாமை குடியிருப்புகளில் உள்ள பெற்றோர்களிடமிருந்து வினணப்பங்கள் பெறப்பட்டால் பள்ளியிலேயே இணைய வழியில் பதிவேற்றம் செய்ய அனைத்து ஏற்பாடுகளை செய்திடவேண்டும் . விண்ணப்பம் பதிவேற்றம் செய்த பின்னர் இதற்கான ஒப்புகைச் சீட்டு(அ.ஆ.(நிலைஸ்ரீ எண்.60 பள்ளிக் கல்வித் துறை நாள்.01.04.2013 இன் படி) உடன் பெற்றோரிடம் தவறாது வழங்கப்பட வேண்டும் என பள்ளித் தாளாளர்கள்/முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சேர்க்கை பெற தகுதியானவர்கள்

1. நலிவடைந்த பிரிவினர் – ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–க்கு குறைவாகவுள்ளவர்கள்.
2. வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் சிறப்பு பிரிவினர்.

பி.சி., பி.சி.எம்., எம்.பி.சி., எஸ்.சி.., எஸ்.சி.ஏ., எஸ்.டி. மற்றும் ஆதரவற்றவர்கள், மாற்று திறனாளிகள் , மூன்றாம் பாலினத்தவர், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகள், துப்புறவுத் தொழிலாளர்களின் குழந்தைகள்.

Scanned by CamScanner

விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட தேவைப்படும் ஆவணங்கள்

1. இருப்பிடச் சான்றிற்கான ஆதாரம்(குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை)
2. சாதி சான்று
3. ஆண்டு வருமானச் சான்று
4. பிறப்புச் சான்று
5. குழந்தையின் சமீபத்திய புகைப்படம்–2

16.4.

இணைப்பு : 1. Flex Board Model

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளி தாளாளர்கள்/முதல்வர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல்

தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

Scanned by CamScanner